திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Social perspective in Poomani's short stories

S. Elizabeth Rani[1], Dr. G. Dharmaraj[2]

[1]Part-time Doctoral Research Scholar, Department of Tamil, Alagappa University, Karaikudi, India

[2]Research Supervisor, Head, Department of Tamil, Ananda College, Devakottai, India

Manuscript ID : **MT107A0041**
Volume : **2**
Issue : **3**
Month : **September**
Year : **2022**
Received: 05.09.2022
Revised: 07.09.2022
Accepted: 09.09.2022
Published: 16.09.2022
Pages : 36-42
DOI: 10.5281/zenodo.7371594

ABSTRACT:

Literature is a mirror of time, and 'time' refers to the 'biography' of the people who comprise it. A great literary artist uses literature for such social developmental purposes. He articulates the people and events he sees in the society in which he lives, along with his thinking. There is no other literary genre that can take human life as it is, like the short story that satisfies the artist's thoughts. Thus the earthly land of Nanjil was born in the affluent part of the country and the life of the mothers seemed to be like a paradise. This article's a summary of the study's exploration of how the biological patterns of life are situated for the people of the land of Karisal, and the optimal solution to the problems posed by socio-economic change and upheaval.

KEYWORDS:

Society, Biological elements, Society and the creator, Agriculture, Attitude of rural students

பூமணியின் சிறுகதைகளில் சமுதாயப் பார்வை

சி. எலிசபெத்ராணி[1], முனைவர். கோ. தர்மராஜ்[2]

[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இந்தியா

[2]துறைத்தலைவர், நெறியாளர், தமிழ்த்துறை, ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி, 'காலம்' என்பது அதனை உள்ளடக்கிய மனிதர்களின் 'வாழ்வியலை' குறிப்பது ஆகும். ஒரு சிறந்த இலக்கியக் கலைஞன் இலக்கியத்தை இத்தகைய சமூக மேம்பாடு சார்ந்த குறிக்கோளுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றான். தான் வாழும் சமுதாயத்தில் காணும் மனிதர்களையும், நிகழ்ச்சிகளையும், தன்னுடைய சிந்தனையுடன் சேர்த்துக் கலைவடிவமாக ஆக்கித் தருகிறான். மனித வாழ்க்கையை உள்ளவாறே எடுத்துக்கூறுகின்ற, கலைஞனின் எண்ணங்களைத் திருப்திபடுத்த சிறுகதைப் போல வேறு எந்த இலக்கிய வகையாலும் முடிவதில்லை. அந்தவகையில் நாஞ்சில் நாட்டின் வளமைமிகு பகுதியில் பிறந்த பூமணி கரிசல் நிலத்தையும், அம் மக்களின் வாழ்வியலையும், சமூகப் பொருளாதார மாற்றங்கள் காரணமாக நேரிட்ட பிரச்சினைகளையும் தம்சிறுகதைகளில் எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதையும், அப்பதிவுகளின்வழி, கரிசல் நில மக்களின் வாழ்வியல் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் உள்ளடக்கமாக அமைகிறது.

கருச்சொற்கள்

சமுதாயம், சமுதாயமும் படைப்பாளியும், விவசாயம், மாணவர்களின் மனநிலை

முன்னுரை

ஒவ்வொரு படைப்பாளியின் கதைகளையும் ரசனையின் அடிப்படையில் சிலபடிமங்களாகவே தொகுக்கலாம். கரிசல் மண்ணில் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் எழுத்துக் கூர்மை பூமணியின் சிறுகதைகளில் காணக்கிடைக்கின்றன. இவரது எழுத்துகளில் நீரின் தன்மையையும் தீயின் வெம்மையையும் உணரலாம். கரிசல் நிலச் சமூக வாழ்வினைத் தனது சிறுகதைப் படைப்பின் வழியாகக் காலந்தோறும் மனித சமுதாயத்தின் பல்வேறு பரிணாமங்களாகப் பதிவுசெய்துள்ளார். சமூகத்தின் அங்கமான எழுத்தாளரின் படைப்பாற்றலும், கலைவுணர்வும் கொண்ட உள்ளத்தில் அவரைச் சுற்றியுள்ள சமுதாயம் தரும் அனுபவம், அவ்வனுபவம் எழுப்பும்

உணர்வுகள் அவற்றால் பெற்றத் தாக்கங்கள் ஏதேனும் ஒன்று எழுத்துருவம் பெற்று இலக்கியமாகிறது. அவ்வகையில் பூமணியின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள கரிசல் நிலமக்களின் சமூகவாழ்வினையும், அவற்றில் காணப்படும் போராட்டங்கள், மனித உணர்வுகள் ஆகியவற்றையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமுதாயம்

தனிமனிதர் குடும்பங்களாகவும், குழுமங்களாகவும், கூட்டமாகவும் ஒரே குடிமக்களாகச் சேர்ந்து வாழும்போது தேவைக்காகவும், வளர்ச்சிக்காகவும் பிறரைச் சார்ந்து வாழும் போது சமுதாயம் உருவாகின்றது எனலாம். சமுதாயம் என்பது **“ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக்கொண்ட ஒரு கட்டமைப்பாகும். ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும்மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்று கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓரிடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்”**[1] என்று வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது. மேலும் சமுதாயம் சமூக வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் கொண்டிருக்கின்ற சிறிய நிலப் பகுதியிலுள்ள குழுவைக் குறிப்பதாகும் என்பதனை அறியமுடிகிறது.

வாழ்வியல்கூறுகள்

இலக்கியம் வாழ்வின் அனைத்துக் கூறுகளைப் பற்றிச் சிந்திப்பதாக உள்ளது. பிற நுண்கலைகளிலிருந்து, இலக்கியத்தைப் பிரிப்பது இந்த அம்சம்தான். இலக்கியத்தின் ‘எழும்புக்கட்டமைப்பாக’ வாழ்வியல் கூறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் இலக்கியப் படைப்புகளின் வடிவத்தைத் தீர்மானிப்பதும் இதுவே. **“இலக்கியப் படைப்பில் மிகவும் பருண்மையான கூறும் இதுவே. ஆகவே தான் இலக்கிய நுண்ணுணர்வு இல்லாதவர்களால் எளிதில் தொட்டு உணரக்கூடியதாக இது உள்ளது”**[2] என்று ஜெயமோகன் கூறுவது மனங்கொள்ளத்தக்கதாகும். பூமணியின் இலக்கியங்கள் குறித்து அதிகம் பேசப்படக் காரணம் அதில் அடங்கியுள்ள ‘கருத்தியல்’ ஆகும். கருத்தியல் ஒருபோதும் தன்னளவில் இலக்கியத்தை உருவாக்குவதில்லை என்பது இலக்கியவாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது. பூமணியின் சிறுகதைகளில் மனித வாழ்வியல் கூறுகள் தவிர்த்து வேறு எதற்கும் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருப்பதில்லை என்பதைக் காணமுடிகிறது.

பூமணியின் புனைவுலகு

பூமணியின் பெரும்பாலான கதை மாந்தர்களுக்கு நிலம் என்பது அவர்கள் உழைத்து உணவு தேடும் களம் மட்டுமாகவே இருக்கிறது. மேலும் அவர்களுக்கு அது மண்டையை மோதி உடைக்கும் பலிபீடம் போலிருக்கிறது. அக்கரிசல் நிலமக்களை

ஆட்டிப்படைக்கும் குருரமான தெய்வம் போலிருக்கிறது. **"பூமணி காட்டும் வறண்ட கரிசலில் வறன்ட மனிதர்கள் செத்து, எரிந்து பசித்து, வியர்த்து வாழ்கிறார்கள்"**[3] இம்மக்களுக்கு நிலம் மீதான மோகம் இல்லை. மிகஎளிதாக இவர்கள் நிலத்தை உதறிவிட்டு பிழைப்பு தேடி தீப்பெட்டி ஒட்டடவோ, பட்டாசு தொழிற்சாலைக்கோ போய்விடுவார்கள் அவர்கள் நிலத்தை ஆன்மாவில் சுமந்து அலைவதில்லை மழை புயலில் வாழைகள் சாய்ந்து, தென்னைகள் சாய்ந்து, நெற்பயிர்கள் அழிந்தால் தற்கொலையும் செய்வதில்லை. ஏனென்றால் மேற்கூறிய பயிர்கள் கரிசல் நிலத்தில் விளைவது மில்லை.

ஆகவேதான் பூமணியின் சிறுகதைகளில் காட்டடப்படும் கரிசலின் ருசி பூமணியின் படைப்பகளில் ஊறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் இது வேறுருசி செத்தமாட்டைக் கால்கள் கட்டி மூங்கில் நுழைத்துத் தூக்கிக் கொண்டுவந்து வகுந்து தோலை எடுத்து பரப்பி அதில் கறியை வெட்டிவைத்து மொத்தக் குடிகளும் பகிர்ந்து உண்கிற கொண்டாட்டமும் கரிசலின் வாழ்க்கைதான்.

"காத்துட்டுக்குக் கறியெடுத்து
கால நீட்டித் திங்கயிலே
துண்டுவுழுகலன்னு
தூக்கிப் போட்டு ஒதச்சானே"[4]

கரிசல்மண், கரிசல்நிலம், அதுதான் பூமணி அவருக்கென உருவாக்கிக் கொண்ட உலகம் என்று ஜெயமோகன் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைகின்றது.

சமுதாயமும் படைப்பாளியும்

ஒரே வகையான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயற்சிக்கின்ற போது சமுதாயம் உருவாகிறது படைப்பாளி தம்வாழ்க்கையின் எல்லாப் புலங்களிலும் சமுதாயம் தரும் அனுபவங்களை அப்படியே தம் படைப்பகளில் பதிவு செய்கிறார். சமூகத்திற்கும், படைப்புக் கலைக்கும் உள்ள உறவு, பிரிக்க முடியாததும் புறக்கணிக்க இயலாததுமாகும். படைப்பாளியின் படைப்பு அவரைச் சமூகத்திலுள்ள மக்களுடன் இணைக்கிற சங்கிலியாகவும், பாலமாகவும் அமைகிறது. சமூகத்தின் மீதான கருத்துக்கள், கணிப்புகள், குறிக்கோள்கள், வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள், அளவுகோள்கள் போன்றவை கலைப்படைப்பு உருவாகக் காரணமாக அமைகின்றன. **"பூமணி பழகத்தான் மென்மையானவர் படைப்பிலோ தீயைப்போல் உக்கிரமானவர். எந்த சமரசத்திற்கும் உடன்படாத பூமணியின் பேனா"**[5] மேலும் **"நாவல்**

கருக்காகவே பூமணி அதிகம் பேசப்பட்டாலும் லேபில் இலக்கியங்கள் வருவதற்கு முன்பே ஆத்மபூர்வமாகத்தன் படைப்பு முயற்சியால் ஈடுபட்டார்”[6] என்பதனை உணரமுடிகிறது. சமூக மாற்றத்திற்காகப் போராடும் அமைப்பில் ஒருபோராளி, சிறந்த சிந்தனையாளர் இவர் படைப்புகளில் மண் மீதான ரசணையும் பிரியமும் அமுங்கி அடித்தட்டு மக்களின் குரல்கள் தூக்கலாக ஒலிக்கிறது. அனைத்துத் தரப்பு மக்களையும் அவர்களின் பிரச்சினைகளையும் தம்முடைய சிறுகதைகளின் வழியாகவே பூமணி பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

சமூகத்தில் காணப்படும் குறைகளை அஞ்சாது எடுத்துக்கூறியுள்ளார். அடித்தட்டு மக்கள் சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படுவதையும், அவர்கள் சந்தித்த அவலங்களையும் தம் சிறுகதைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தான் படைப்பாளியான நோக்கத்தைப் பூமணி தார்பாய்ச்சிக்கொண்டு, களமிறங்கும் பெரிய நோக்கம் எதுவும் கிடையாது. **“சின்னப் பிள்ளை தெல்லுத் தெறித்து விளையாடியது போல் ஒரு கர்வத்தில் நடந்து விட்டது”**[7] என்ற அவரின் கூற்றின் மூலம் அறியலாம். பூமணி இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் கிராமத்தை விட்டுச் சென்று நகரத்தில் வாழ்ந்தாலும் கிராம வாழ்க்கை அவர் நினைவைவிட்டு அகலவில்லை **“நாட்டார் மரபின் பேச்சு சாதுரியத்தைக் கொட்டிக் காட்டுவதற்காக எழுதப்பட்டவை போல் தோன்றினாலும் பூமணிக்கு எதிலும், ஒரு தனிப்பிரியமும் மயக்கமும் கவிந்து கிடக்கிறது”**[8] என்கிறார்.

மேலும், கிராமத்திற்குரிய குடும்ப உறவுகளை, மனித நேயங்களை, மண்வாசனையை பூமணிதன் சிறுகதைகளில் சித்தரிக்கத் தவறவில்லை. அழுத்தமான உறவுகளையும், மனிதநேயத்தையும் ஆதிக்கசாதிக்கும், அடிநிலைச் சாதிக்கும் இடையே மேன்மைப்படுத்தியுள்ளார்.

மேலும், பூமணியின் சிறுகதைகள் கரிசல் மண்ணையே களமாகக் கொண்டுள்ள ஆண்டிப்பட்டி, கோவில்பட்டி, சித்திரம்பட்டி, கழுகுமலை, துரைச்சாமிபுரம், வில்லிசேரி, பாஞ்சாலஞ்குறிச்சி ஆகிய ஊர்கள் இவர் கதைகளில் இடம்பெறுகின்றன. கரிசல் நிலத்தைச் சார்ந்த இவ்வூகளைத் தவிர ஏவல், பேட்டை, முக்கூடல், ஸ்ரீவைகுண்டம், தென்காசி, குற்றாலம் என்ற திருநெல்வேலி பகுதியைச் சார்ந்த ஊர்களும் இவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

விவசாயம்

கரிசல் காட்சி வெளியாக அவரது சிறுகதைகளில் காட்டப்பட்டிருக்கும். ‘பொழுதடைய இன்னும் கொஞ்சம் நேரந்தான் இருந்தது. எலுமிச்சம் பழத்தை மெல்ல மெல்ல விழுங்கிய மாதிரி மலை முகடுகளுக் கிடையில் பொழுது

நழுவிக்கொண்டிருந்தது' எனக் கரிசலில் அந்திப் பொன்னிறம் கொள்வதைக்கூட சர்வசாதாரணமான அழகியலும் சொல்லிச் செல்கிறது பூமணியின் பார்வை. 'தண்ணீர் வாய்க்கால் வழியாகக் கிழக்காமல் அலுப்புத் தீர ஓடி தெற்கே அடர்ந்து வளர்ந்த மிளகாய்ச் செடித்தோட்டத்தக்குள் நுழைந்து பூவும் பிஞ்சுமாக பூரித்து நிற்கும் செடிகளுடே தண்ணீர் ஓடுவதைப் பார்த்தால் ஒரு காணகத்துக்குள் ஆறு ஓடுவதைப் போலபிரமை' என குழந்தைத் தனமான இரசனைச் சட்டென்று 'காய்ந்து சிறு விருவோடிய நிலத்தில் நீர்நனைக்கவும் ஆவிவிட்டு நீர்த்து பொருமிப் பூரிக்கும் கண்ணிலிருந்து குளுமையான மணம் கிளம்பியது' என கூர்மையான அனுபவம் பதிவாகிறது.

விவசாயத் தொழிலை மேற்கொள்பவர்களை உழவன், உழத்தி எனப் பண்டையத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் தம் உழைப்பை நிலத்தின் பால் செலவிட்டு நிலத்தை விளை நிலமாக மாற்றிய பெருமைக்குரியவர்கள் வளர்ந்த வரும் நவீன மாற்றங்கள் விவசாயத் தொழிலுக்குப் பலவகையான இடர்பாடுகளையும் கொடுத்த வண்ணம் உள்ளன.

விவசாயத் தொழிலானது மண்ணையும் விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கும் மண் தன்னுடைய வளமையை இழத்து விடும் என்பது வேளாண்விஞ்ஞானிகளின் கருத்து விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்குசீரானதாக இல்லை. **"எங்க அண்ணன் பெரியாளாயிட்டான் அண்ணா அவுகவீட்ல சம்பளத்துக்கு இருக்கான். ஒரு நாளைக்குத் தண்ணி பாய்ச்சுவான். ஒருநாளைக்குகமல ஏறப்பான்"**[9] எனும் ஆசிரியரின் கூற்று விவசாயிகளின் உற்பத்தியினை உணர்த்துகிறது. மண்ணைக் கிண்டி மண்ணில் வாழ்ந்து மறையும் பெரிய மண்ணாடி மண்ணின் ஒரு பகுதியாகவே தோன்றும் அந்த மகத்தான பிரமையே சிறுகதைகளை இலக்கியமாக ஆக்குகிறது. அதன்பின் மண்ணின் சுவையை ஒவ்வொருவரியிலும் தேக்கிக்காட்டியிருக்கிறது.

கிராமத்து மாணவர்களின் மனநிலை

அன்றாடம் வயிறுபோடு ம்சப்தத்தில் செவியில் போடப்படும் உணவு பெரும்பாலான கரிசல் நிலச் சிறுவர்களுக்கு எட்டாததாகவும், பற்றாக்குறையாகவுமே உள்ளதனைத் தனது சிறுகதைகளில் வெளிக்காட்டியுள்ளார் பூமணி, இதனை **"எஞ்சொவட்டுப் பெயகெல்லாம் பள்ளிக் கொடத்துல படிக்காக"** (பூமணி, பூமணிகதைகள், ப.12.) என்றும், **"பிஞ்சுப் பழம் கதையினால் பள்ளி வாழ்வினை நன்கு ரசித்து அனுபவிக்கும் நேரம் அவனது தாயும் தந்தையும் இறந்து விடுகின்றனர். அவன் பாடு திண்டாட்டமாகி விடுகின்றது பசியினைப் போக்க ஆடு மேய்க்கச் செல்கிறான்"**[10]

“முத்துக் குட்டிப் பெயபெழச்சுக்கிறதுக் கென்ன இப்பயே பெரியாளுப் போல வேல செய்றானேன்னு வீட்லசி ன்னம்மாட்டச் சொல்லுவான்”[11]

என்று கூறியுள்ளதனை உணரமுடிகிறது. மேலும் **“நானும் ஒத்தாசைக்கு சின்ன சின்ன வேல செய்வேன் மாட்டுக்குக் கூளம் புடுங்கிக் போடுவென். சணியள்ளிப் போடுவென் காட்டுக்குக் கஞ்சிகொண்டு போயிக் குடுத்துட்டு வருவேன்”**[12] எனும் சிறுகதை வரிகள் வழியாக வயிறு அறிவை வென்று விடுகின்றது எனும் கிராமத்து மாணவர்களின் மனநிலைத் தனது சிறுகதைகளில் சித்தரித்துள்ளதனை உணரமுடிகிறது.

முடிவுரை

இலக்கியம் வாழ்வின் அனைத்துக் கூறுகளை பற்றிச் சிந்திப்பதாக உள்ளது. பிற நுண்கலைகளிலிருந்து இலக்கியத்தைப் பிரிப்பது இந்த அம்சம்தான். இலக்கியத்தின் ‘எலும்புக் கட்டமைப்பாக’ வாழ்வியல் கூறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் ‘இலக்கியப் படைப்பில் மிகவும் பருண்மையான கூறும் இதுவேயாகும்’ என்பதனை உணரமுடிகிறது.

சமூகத்திற்கும் படைப்புக் கலைக்கும் உள்ள உறவு பிரிக்க முடியாததும் புறக்கணிக்க இயலாததுமாகும். படைப்பாளியின் படைப்பு அவரை சமூகத்திலுள்ள மக்களுடன் இணைக்கிற சங்கிலியாகவும், பாலமாகவும் அமைகிறது. சமூகத்தின் மீதான கருத்துக்கள், கணிப்புகள், குறிக்கோள்கள், வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள் அளவுகோல்கள் போன்றவை கலைப்படைப்பு உருவாகக் காரணமாக அமைகின்றது.

பூமணியின் கரிசலே அவரது மொழியாகவும் இலக்கியமாகவும் அமைந்திருக்கிறது. அவரது படைப்புலகின் எல்லாச் சுவைகளும் அந்நிலத்தின் அழகைப் பிரதிபலிக்கின்றார்.

விவசாயத் தொழிலானது மண்ணையும் விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கும் மண் தன்னுடைய வளமையை இழந்து விடும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து. விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்குசீரானதாக இல்லை எனும் கருத்தினை வலியுறுத்திள்ளதைக் காணமுடிகிறது.

வாழ்நாளெல்லாம் உழைத்தவர்கள் உணவே கடவுளாகத் தவமிருக்கும் அந்தகாட்சி அளிக்கும் ஆழமான வலிநிறைந்த வாழ்வுத் தழும்புகள் பூமணியின் சிறுகதைகளில் பதிவு செய்துள்ள பாங்கு நிலையினை உணரமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கிங்சுலிதேவி, வாழ்வியற்களஞ்சியம் தொகுதி- 5, ப.469.
2. ஜெயமோகன், பூக்கும்கரவேலம், ப.50.
3. ஜெயமோகன், பூக்கும்கரவேலம், ப.58.
4. ஜெயமோகன், பூக்கும்கரவேலம், ப.68.
5. பூமணி, ஏலேய், நற்றிணை பதிப்பகம், ப.2.
6. பூமணி, ஏலேய், நற்றிணை பதிப்பகம், ப.3.
7. பூமணி, ஏலேய், நற்றிணை பதிப்பகம், ப.85.
8. பூமணி, பூமணிகதைகள், நற்றிணை பதிப்பகம், பக்.3-4.
9. பூமணி, பூமணிகதைகள், நற்றிணை பதிப்பகம், ப.16.
10. பூமணி, பூமணிகதைகள், நற்றிணை பதிப்பகம், ப.17.
11. பூமணி, பூமணிகதைகள், நற்றிணை பதிப்பகம், ப.63.
12. பூமணி, பூமணிகதைகள், நற்றிணை பதிப்பகம், ப.65.

REFERENCES

1. Kingsulidevi, Encyclopaedia Vol-5, p.469.
2. Jayamohan, Pookumkaravelam, p.50.
3. Jayamohan, Pookumkaravelam, p.58.
4. Jayamohan, Pookumkaravelam, p.68.
5. Poomani, Elie, p.2.
6. Poomani, Elie, p.3.
7. Poomani, Elie, p.85.
8. Poomani, Poomani Stories, pp.3-4.
9. Poomani, Poomani Stories, p.16.
10. Poomani, Poomani Stories, p.17.
11. Poomani, Poomani Stories, p.63.
12. Poomani, Poomani Stories, p.65.